**செய்தி வெளியீடு எண்:124** **நாள் :25.02.2016**

# “சென்னை அறிவியல் திருவிழா–2016”

## கருத்து: “பேரிடர் மேலாண்மை”

அறிவியல் நகரம், தமிழ்நாடு அரசால் அறிவியல் பற்றிய விழிப்புணர்வை பெருமளவில் பொதுமக்கள் மற்றும் மாணாக்கரிடையே உருவாக்க நிறுவப்பட்டது. அறிவியல் நகரம் ஒரு உன்னதமான ஒரு நிகழ்வாக அறிவியல் திருவிழாவினை ‘அன்றாட வாழ்வில் அறிவியல்’ என்ற கருத்தில் 2008 முதல் நடத்தி வருகிறது. இந்த அறிவியல் திருவிழாவினை நடத்துவதன் முக்கிய நோக்கம் இளைஞர்களுக்கிடையே அறிவியல் தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமில்லாமல் அறிவியல் விழிப்புணர்வினை பெருமளவில் ஏற்படுத்துவதுமாகும்.

இவ்வருடம் இவ்வறிவியல் திருவிழாவினை ‘பேரிடர் மேலாண்மை’ என்ற கருத்தில் பிப்ரவரி மாதம் 26 முதல் 29 தேதி வரை இராணி மேரிக் கல்லூரி, சென்னை வளாகத்தில் நடத்தப்படவுள்ளது. இத்திருவிழாவின் முக்கிய அம்சங்கள் பின்வருவன.

1. பிரமாண்ட அறிவியல் கண்காட்சி 100 காட்சி அரங்குகளில் – 70க்கும் மேற்பட்ட கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களால் காட்சி பொருட்கள் வைக்கப்படுகின்றன.
2. 27.2.2016 அன்று காலை 11.30 முதல் 12.30 வரை “புற்று நோய்க்கான காரணங்கள் மற்றும் தடுப்பு” பற்றிய பிரபல விரிவுரை மருத்துவர். மல்லிகா, புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் அவர்களால் வழங்கப்படுகிறது.
3. 28.2.2016 காலை 11.30 முதல் 12.30 வரை “பேரிடர் மேலாண்மை” என்ற தலைப்பில் குழு விவாதம் நடத்தப்படும்
4. அறிவியல் கண்காட்சி செல்வி. அபூர்வா, இ. ஆ. ப., செயலர், உயர்கல்வித் துறை அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைப்பார்கள். புற்று நோய் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் திருமதி. வி. சாந்தா மற்றும் சென்னை மேம்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் மூத்த பேராசிரியர் சி. ஜனகராஜ் சிறப்புரை ஆற்றுவார்கள்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**